

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.3.2024) முகாம் அலுவலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டத்திற்கு வருவதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நேற்று முன்தினம் (07.03.2024) ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டீபன் ஜேசுபாதம், மாவட்ட வருவாய் அலுவலர் செ.பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் அமைச்சர் முனைவர். பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்ரி உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - அர.சக்கரபாணி - கயல்விழி செல்வராஜ் பங்கேற்பு!

# திண்டுக்கல்லில் உலக மகளிர் தின விழா!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

திண்டுக்கல், மார்ச் 9-

உலக மகளிர் தின விழா, திண்டுக்கல் அங்கு விலாஸ் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இன்று (9.3.2024 - சனிக்கிழமை) மாலை 4:30 மணி அளவில் கழகத்துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெறுகிறது.

வரவேற்புரை தமிழ் ரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மகளிர் (தொண்டரணி இணைச் செயலாளர்) சிறப்புரை- ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, (திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர்), சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் கீதா ஜீவன் (தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்), ஐ.பி.செந்தில்குமார் (திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பழனி சட்ட மன்ற உறுப்பினர்) முன்னிலை- மகளிர் அணி த்தலைவர் விஜயா தாயன்பன், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப இராணி, மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார். வாழ்த்துரை-ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மகளிர் அணி துணைச் செயலாளர் ,பா வேலுசாமி திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ,எஸ். காந்திராஜன் வேடந்தூர் சட்டமன்ற உறுப்பினர், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் திண்டுக்கல் மாநகரச் செயலாளர் ச. ராஜப்பா, காயத்ரி ஸ்ரீகாந்த் புதுச்சேரி மாநில மகளிர் அணி அமைப்பாளர் நன்றியுரை திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உமா மகேஸ்வரி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் இந்திரா திருநாவுக்கரசு, திண்டுக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், முத்துலட்சுமி திண்டுக்கல் மேற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர், இந்திராணி திண்டுக்கல் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் அருள் வாணி திண்டுக்கல் மாநகர மகளிர் தொண்டரணி அமைப்பாளர்.

இந்த நிகழ்ச்சியில் மாநில மாவட்ட ,மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் கழக மகளிர் அணியினர் அதிகளவில் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கின்றோம். ஜெ.ஹெலன் டேவிட்சன் மாநில மகளிர் அணி செயலாளர், நாமக்கல் ப இராணி மாநில மகளிர் தொண்டரணி செயலாளர்.

# கர்நாடக மாநிலத்தில் 10 ஆம் வகுப்பு புத்தகத்தில் பெரியார் பாடம்!

## காங்கிரஸ் அரசு உத்தரவு!

பெங்களூரு, மார்ச் 9-

கர்நாடக பள்ளிக்கல்வி பாடப்புத்தகங்களில் பா.ஜ.க. அரசால் செய்யப்பட்ட மாற்றங்கள் திருத்தியமைக்கப்படும் என்று காங்கிரஸ் கட்சி சட்டப்பேரவை தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளித்தது. சட்டப்பேரவை தேர்தலில் ஜெயித்து ஆட்சிக்கு வந்ததும், ஓய்வு பெற்ற வரலாறு பேராசிரியர் மஞ்சுநாத் ஹெக்டே தலைமையில், பாடப் புத்தக திருத்த குழு அமைக்கப்பட்டது.

மஞ்சுநாத் ஹெக்டே தலைமையிலான குழு பாடப்புத்தகங்களில் செய்ய வேண்டிய திருத்தங்களை பள்ளிக்கல்வித்துறைக்கு பரிந்துரை செய்தது. அதன்படி, கன்னட பள்ளி பாடப்புத்தகங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் 2024-2025ம் கல்வியாண்டிலிருந்து நடைமுறைக்கு வரும். பா.ஜ.க. அரசால் பாடப்புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்ட, சந்திர சேகரா கம்பாரா, கிரிஷ் கர்னாட், தேவிதாச மாரியப்பா, அனந்தமூர்த்தி ராவ், தேவனூர் மகாதேவா ஆகியோரது பாடங்களும், செய்யுள் பாடல்களும் பாடப்புத்தகங்களில் மீண்டும் சேர்க்கப்படுகின்றன.

பத்தாம் வகுப்பு வரலாறு பாடப்புத்தகத்தில் சமூக சீர்திருத்த மற்றும் மத சீர்திருத்த இயக்கங்கள் குறித்த பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. சமூக சீர்திருத்தவாதிகளான பெரியார் மற்றும் சாவித்ரிபாய் புலே ஆகியோரது பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 7ம் வகுப்பு பாடப்புத்தகத்தில் இடம்பெற்றிருந்த பெரியார் பாடங்கள் பா.ஜ.க. அரசால் நீக்கப்பட்ட நிலையில், பெரியார் குறித்த பாடங்கள், இப்போது 10 ஆம் வகுப்பு வரலாறு புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

### கிராமப்புற பொதுமக்களின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்காக

# எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, மார்ச் 9-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 07.03.2024 அன்று பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புற பொதுமக்களின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், கிராமப்புறங்களில் குடிநீர் வசதி, கழிவறை வசதி, மின்விளக்கு வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.



அதன்படி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், காட்டாத்தி மற்றும் வெட்டன் விடுதி கிராமத்தில், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், நபார்டு திட்டத்தின்கீழ் தலா ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் மற்றும் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டிடம் மற்றும் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடம் மற்றும் கருப்புடையன்பட்டி ஊராட்சியில், ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தார்சாலை மற்றும் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பள்ளி வகுப்பறை கட்டிடம் உள்ளிட்ட முடிவுற்ற திட்டப்பணிகள் திறந்து வைக்கப்பட்டது. மேலும் ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள துணை சுகாதார நிலைய கட்டடப் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத்தொடர்ந்து, பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களுக்கான ஆணைகளும் வழங்கப்பட்டது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கிராமப்புறங்களில் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டப் பணிகளை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார், மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மருத்துவர் கோ.சோமசுந்தரம், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் மாலா ராஜேந்திரதுரை, அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், காட்டாத்தி ஊராட்சிமன்றத் தலைவர் கலைவாணி குழந்தையா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் விரைவில் தொழிற்பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேச்சு!

புதுக்கோட்டை, மார்ச் 9-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க., புதுக்கோட்டை நகர தி.மு.க. சார்பில் கழக தலைவர் தளபதி அவர்களின் 71 வது பிறந்த நாள் விழா மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவை நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் புதுக்கோட்டை திலகர் திடலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை நகர தி.மு.க. செயலாளர் ஆ.செந்தில் வரவேற்புரையிலும் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில்

கழக தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

டீசல் விலையை குறைப்பேன் என்று பிரதமர் கூறினார். அதே போன்று மதுரையில் எய்ம்ஸ் கட்டி தருகிறேன் என்று கூறினார். மேலும் இரண்டு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கொடுப்பேன் என்று கூறினார், அதுவும் கொடுக்கவில்லை. இதேபோன்று பிரதமர் வாயிலேயே தான் வடை சுட்டு வருகிறார்.

மீனவர்கள் பிரச்சினை தீர்க்கப்படும் என்று கூறி பிரதமர் ஆட்சிக்கு வந்தார். ஆனால் அந்த பிரச்சனை இன்னும் தீரவில்லை. இன்னும் இரண்டு மாதத்திற்கு அவர்கள் தமிழகத்தை விசிட் அடித்துக் கொண்டு இருப்பார்கள். தி.மு.க. என்பது கட்சி கிடையாது, இது ஒரு மக்கள் இயக்கம். தமிழகம் இன்று நம் நம்பர் ஒன் மாநிலமாக இருக்கிறது என்றால் அதற்கு அடித்தளம் இட்டவர் கலைஞர் தான். திமுக ஆட்சியில் இருக்கிறதோ, இல்லையோ, மக்களோடு மக்களாக திமுக இருக்கிறது.

தி.மு.க. ஒருவருக்கான கட்சி கிடையாது. இது . அனைவருக்குமான கட்சி. 432 கோடி மகளிர் இலவச பேருந்து திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

இந்தத் திட்டத்தை இந்தியாவே வியந்து பாராட்டி வருகிறது. மூன்று ஆண்டுகளில் வெளிநாட்டிலிருந்து 10 லட்சம் கோடி என்று முதலீடுகளை கொண்டு வந்து குவித்தவர் முதல்வர் என தெரிவித்தார். விரைவில் புதுக்கோட்டையில் தொழிற் பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேசினார்.

இந்நிகழ்வுகளில் திட்டம் மற்றும் வளர்ச்சி குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அரு.வீரமணி,

கே.ஆர்.என்.போஸ், கீரை.தமிழ் ராஜா,க.மதியழகன், பெ. ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, எம். லியாகத் அலி,

தவ பாஞ்சாலன், தென்னலூர் எம்.பழனியப்பன், மு.க.ராமகிருஷ்ணன், சக்தி ராமசாமி, என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர். செல்லத்துரை, சி.ஆர்.விசித்ரா,

என்.சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம.சத்தியசீலன், மா.தமிழ்அய்யா, ஆர்.ஆர். எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ். வெங்காசலம், வெ.முத்து கிருஷ்ணன். அ.இளங்குமரன், சி.சண்முகம், ஆர். சாமிநாதன் கே.பி.அய்யப்பன், பி. அண்ணாத்துரை,



வை. விஜயக்குமார், உமுருகேசன், வை.எம்.எம்.பாலு,

அ.ரெத்தினம், டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், சி. அரங்கநாயகம், வி. என். எம்.பாலு, வி.ஜி.ஆர்.மணி வண்ணன், பொன்.பாரி வள்ளல், செந்தாமரை பாலு, தவசு மணி, வே. ராஜேஸ், எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், எம். வேலுச்சாமி, கவிவேந்தன், விமலாதி, மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, நா.ஸ்டாலின் நாராயணசாமி, விளாப்பட்டி சிவா, ராம.செல்வ ராஜ், ராய. முத்துக்குமார், ஆ.ராஜேந்திரசோழன், மழையூர் ராமசாமி, ஜெ. அஸ்ரப் அலி, கை. பழனிச்சாமி, எம்.ஏ.எம். இம்தியாஸ், வெற்றிச் செல்வன், டி.அப்புக்காளை, பழனிவேலு, தெய்வானை, ராயல் சபா, உஷா ராணி, பா.ரெங்கராஜன், இதயம் அப்துல்லா, கி.சுப்பிரமணியன், சுமோ பாலு, புல்வயல் சுந்தர்ராஜ், புதுநகர் குமார், எம்.செந்தில்குமார், செ.ரமேஷ், எம். காதர் கனி, மெஸ் மூர்த்தி, மு. தென்னரசு, என்.ஆர். பரிமளம், வை நடராஜன், ஆர்.செந்தில்குமார், செ. கணேஷ், கவிஞர் மரிய எட்வின், க.செல்லையா, கி.வெங்கடேசன், அற்புத ஹென்றி, ராஜா, ஓவியா

மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் செ.குறிஞ்சிவாணன் நன்றி கூறினார். கூட்டத்தில் பிரதமர் மோடிக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

### தென்காசி வடக்கு மாவட்டம்

# மேலநீலிதநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் வெற்றி விஜயன் (எ) விஜயகுமார் அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **எம்.பால்ராஜ்** (6/14, தெற்கு தெரு, அடைக்கலாபுரம், வண்ணிக்கோனேந்தல், தென்காசி மாவட்டம்) அவர்கள் மேலநீலிதநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# செயங்கொண்டத்தில் முதல்வர் பிறந்தநாள் - நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

## கவிஞர் சல்மா - சுபா.சந்திரசேகர் - க.சொ.க.கண்ணன் பங்கேற்பு!

அரியலூர், மார்ச் 9-

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை விளக்கப் பொதுக்கூட்டம், செயங்கொண்டம் நகரம் சன்னதி தெருவில் நடைபெற்றது.

நகர கழக செயலாளர் வெ.கொ.கருணாநிதி வரவேற்புரை நிகழ்த்தினார்.

தனசேகர், பா.கோபாலகிருஷ்ணன், இரா.மணிமாறன், ரெங்க.முருகன்,ஆர். கலியபெருமாள், அ.அல்போன்ஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் கவிஞர் சல்மா, கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் கு.ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன் பொதுக்குழு உறுப்பினர்கள் சி. ஆர். எம். பொய்யாமொழி ஆர்.எம்.அன்பழகன்,

வி.எம்.ஷாஜகான், மலர்விழி ரஞ்சித்குமார், மார்க்ரேட் அல்போன்ஸ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர். ராமராஜன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் க.தர்மதுரை, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் இரா. பானுமதி மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் என். ஆர். ராமதுரை. மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் சு.இளங்கோவன், மாவட்ட நெசவாணி அமைப்பாளர் தங்க. ராமகிருஷ்ணன், மாவட்ட மீனவணை அமைப்பாளர் எம். ஜி. ராஜேந்திரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கா.செல்வராஜ், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சி. அந்தோணிசாமி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் மு. குலோத்துங்கன் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சுபா. வசந்தபகலவன், பஞ்சநாதன், ஜே.கே. கிருஷ்ணா, பழ.புனிதம், கார்த்திக், சுரேஷ் நகர கழக நிர்வாகிகள் ஞானபிரகாசம் எஸ். ராஜமாணிக்கம், வீனஸ் பா. ரமேஷ் மா. செ. செந்தில்குமார், நிர்மலா செல்வம், வி. கொளஞ்சியப்பா,

கு.பிரபாகரன் வட்டக் கழக செயலாளர் வி.அப்பர், நடராஜன். எம்.ஆர். அம்பிகாபதி ஆர். காசிநாதன் ஜி. மணிவண்ணன், மகேந்திரன், என். இதயத்துல்லா, ஆர். கணேசன், என். பிச்சை பிள்ளை, சா. தமிழரசன், சி.நடராஜன்,

அ.பாலகிருஷ்ணன் மருதை விஜயன், சிவ குருநாதன் க.சிவபாலன், கே. சங்கர், எஸ்.குமரவேல், ஆர்.பால விக்னேஷ், ஆனந்த் சுப்பிரமணியன் அபாகிருஷ்ணம் நகர் மன்ற உறுப்பினர்கள் அம்பிகாபதி, செ.வெற்றிவேலன், கிருபாநிதி, மீனாட்சி நடராஜன், ருக்ஷ்ணா பேகம், அலமேலுமங்கை, துர்கா, சுந்தராபாய், லாவண்யா கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர். இறுதியாக நகர துணை செயலாளர் முரசொலி குமார் நன்றி கூறினார்.




பெரம்பலூர் நகரக் கழகம் சார்பில் "எல்லோருக்கும் எல்லாம்' திராவிட மாடல் நாயகர் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. இதில் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் அகியோர் சிறப்புரையாற்றினார்கள். முன்னாள் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஆதி திராவிடர் நலக் குழுவினர் ஒன்றிய அரசு ஆதி திராவிடர்களுக்கு இழைக்கும் அநீதிகள் குறித்தும். திராவிட மாடல் அரசு செய்து வரும் நன்மைகள். குறித்தும் அழகாபுரத்தில் மாவட்ட அமைப்பாளர். அழகாபுரம முரளி தலைமையில் மாநகர செயலாளர். பா. ரகுபதி தெருமுனைபிரச்சாரம் செய்தார். உடன் மாவட்ட நிர்வாகிகள். தேவதாஸ், இளங்கே . பாபு, ஆகியோர் இருந்தனர்.